Thiru G. VASANTHA PAI: * * *

Vice-Chairman (Thiru E. S. VENKATESAN): * * *

Thiru G. VASANTHA PAI: * * *

Vice-Chairman (Thiru E. S. VENKATESAN): * * *

Thiru G. VASANTHA PAI: * * *

மாற்றுத் தலைவர் (திரு. ஈ. எஸ். வெங்கடேசன்): * * *

Thiru G. VASANTHA PAI: * * *

மாற்றுத் தலைவர் (திரு. ஈ. எஸ். வெங்கடேசன்): * * *

Thiru G. VASANTHA PAI: * * *

மாற்றுத் தலைவர் (திரு. ஈ. எஸ். வெங்கடேசன்): * * *

Thiru G. VASANTHA PAI: * * *

VICE-CHAIRMAN: * * * இதை அவைக் குறிப்பிலிருந்து நீக்கி விடுகிறேன்.

மாற்றுத் தலைவர் (திரு. ஈ. எஸ். வெங்கடேசன்): இந்தப் பிரச்சினையை இத்தோடு முடித்து விடலாம்.

2. தகவல் கோரல்.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: மாற்றுத் தலைவரவர்களே, கல்லூரி ஆசிரியர்கள் போராட்டம் பற்றி நான் 28-8-1978-லே கவன ஈர்ப்புத் தீர்மானம் தந்திருந்தேன். அது இன்றைய வரையிலே எடுத்துக்கொள்ளப்படவில்லை. கல்லூரி ஆசிரியர்கள் போராட்டம் இன்றைக்கு தீவிரமாக நடந்துகொண்டிருக்கிறது. பஸ்களை வழி மறிக்கிறார்கள். நான் வந்த பஸ்கூட அது போக வேண்டிய வழித் தடத்தில் போகாமல், வேறு வழியில் திருப்பிவிடப்பட்டது. அந்த கவன ஈர்ப்புத் தீர்மானம் இதுவரை எடுத்துக்கொள்ளப்படவில்லை என்று கூறி, அதை உடனடியாக எடுத்துக்கொள்ள ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாற்றுத் தலைவர் (திரு, ஈ. எஸ். வெங்கடேசன்): தினமும் இரண்டு கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் எடுத்துக்கொள்ளப்படு கின்றன. மாண்புமிகு உறுப்பினரவர்கள் கொடுத்த தீர்மானத் திற்கு அமைச்சரின் அறிக்கை இன்றுதான் வந்திருக்கிறது. நாளை அல்லது நாளை மறு நாள் எடுத்துக்கொள்ளப்படும்.

Thiru G. VASANTHA PAI: * * *

Vice-Chairman (Thiru E. S. VENKATESAN): * * *

மாண்புமிகு திரு. க. இராசா முகமது: * * *

---

* * * தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.

[பிற்பகல் 5-20]

Thiru G. VASANTHA PAI: * * *

மாற்றுத் தலைவர் (திரு. ஈ. எஸ். வெங்கடேசன்): * * *

மாண்புமிகு திரு. க. இராசா முகமது: * * *

Thiru G. VASANTHA PAI: * * *

மாற்றுத் தலைவர் (திரு. ஈ. எஸ். வெங்கடேசன்): * * *

Thiru G. VASANTHA PAI: * * *

VICE-CHAIRMAN (Thiru E. S. VENKATESAN): * * *

மாண்புமிகு உறுப்பினருடைய பேச்சு எல்லாம் குறிப்பிலிருந்து நீக்கப்பட வேண்டும்.

3. கவன ஈர்ப்புத் தீர்மானங்கள்.

(1) அரசுப் பள்ளிகளில் 1-4-1970-க்குப் பின் நியமிக்கப்பட்ட இடை நிலை ஆசிரியர்கள் பணியில் சேர்ந்த நாள் முதல் பணி வரன்முறைப் படுத்தப்படாதது குறித்து.

திரு. எம். சங்கரலிங்கம்: மாற்றுத் தலைவர் அவர்களே, "அரசுப் பள்ளிகளில் பணிபுரியும் இடைநிலை ஆசிரியர்களில் 1-4-1970-க்குப் பின் நியமிக்கப்பட்டவர்கள், பணியில் அவர்கள் சேர்ந்த நாள் முதல் பணி வரன் முறைப்படுத்தப்பட்டு, வருட ஊதிய உயர்வு வழங்கப்படாமல் 1-4-1974-லிருந்து பணி வரன் முறை செய்யப்பட்டு ஊதிய உயர்வு வழங்கப்படுவதால், பாதிக்கப்பட்டுள்ள நிலை குறித்து'' கல்வி அமைச்சரின் அவசர கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, அரசாணை எண். 428, கல்வி, நாள் 21-3-1974-ல் 1-4-70-க்குப் பின் அரசு கழக உயர்நிலைப் பள்ளிகளில் தற்காலிகமாக நியமனம் செய்யப்பட்டு 21-3-1974-ல் ஒரு வருட பணிக்காலம் நிரம்பப் பெற்று தமிழ் நாடு கல்வி சார்புப் பணி விதிகளின் படி கல்வித் தகுதி பெற்ற அனைத்து இடைநிலை ஆசிரியர்கள், இரண்டாம் நிலை தமிழ் வித்வான்கள் மற்றும் தனித் தேர்ச்சி பெற்ற ஆசிரியர்கள் அனைவரின் பணியையும் உடனடியாக வரன்முறைப்படுத்த ஆணையிடப்பட்டது. மேற்கூறிய ஆசிரியர்களின் நியமனம் தமிழ் நாடு கல்வி சார்புப் பணி விதிகளின் படியோ அல்லது மாவட்டக் கழகச் சட்டம் 1920-ன்படி தொகுக்கப்பட்ட சட்ட விதிகளின்படியோ செய்யப்பட்டது. ஆனால் அரசாணை எண். 761, கல்வி, நாள் 16-5-70-ன்படி 1-4-70-க்குப் பின் செய்யப்படும் நியமனங்கள் அனைத்தும் தமிழ் நாடு கல்வி சார்புப் பணி விதிகளின்படிதான் செய்யப்பட வேண்டும். அதற்கு மாறாக சில

* * * தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.